செ.வெ.எண்.446 நாள் - 08.09.2017

# செய்திக்குறிப்பு

தமிழகக் கல்லூரி மாணவ / மாணவியர்களிடையே படைப்பாற்றலையும், பேச்சாற்றலையும் வளர்க்கும் நோக்கில் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கிடையே கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் தமிழ் வளர்ச்சித்துறை சார்பாக ஆண்டுதோறும் நடத்தப்பெற்று பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் தமிழ் வளர்ச்சித்துறையின் சார்பில் அனைத்து கல்லூரிகளுக்கும் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் 15.09.2017 அன்று காஞ்சிபுரம் மாவட்டம் பச்சையப்பன் மேல்நிலைப்பள்ளியில் (மூங்கில் மண்டபம்) நடைபெறவுள்ளன. ஒவ்வொரு கல்லூரியிலிருந்தும் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் போட்டிக்கு ஒருவர் வீதம் மூன்று மாணவர்கள் மட்டும் கலந்து கொள்ளலாம். அவர்களை கல்லூரி முதல்வர் அவர்களே தெரிவு செய்து அனுப்புதல் வேண்டும்.

கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெறும் மாணவர்களுக்கு முதல் பரிசு ரூ.10,000/-மும், இரண்டாம் பரிசு ரூ.7,000/-மும் மூன்றாம் பரிசு ரூ.5,000/-மும் பரிசுத்தொகையாக வழங்கப்படும். இதில் அனைவரும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.